Kurusady
CATECHISM

# புனித அந்தோணியார் ஆலயம், குருசடி

மறைக்கல்வி - வினாடிவினா 023 - மார்ச் 13, 2022 முதல் மார்ச் 19 , 2022 வரை.

## இருபத்தி மூன்றாவது வாரத்திற்கான வினாடிவினா

---

**சரியான பதிலை டிக் [ ✔ ] செய்யவும்** **மதிப்பெண்கள்: 100**

---

**கேள்வி 01**

மரியா எலிசபெத்துக்கு உதவி செய்ய மலை நாட்டிற்கு என்ன மனதுடன் புறப்பட்டார்? (அவர்கள் பெண்கள் - லூர்துமேரி - பக். 169)

[ ] தியாக மனதுடன்

[ ] கோபத்துடன்

[ ] வெறுப்புடன்

[ ] இவற்றில் எதுவும் இல்லை

**கேள்வி 02**

கன்னி மரியாவின் தாய்மை விழா எங்கு எப்போது முதன் முதலாக கொண்டாடப்பட்டது? (கன்னிமரியா – ஆக்னஸ் ஜோஸ் - பக். 161)

[ ] 1904 அக்டோபர் 11-ம் தேதி போர்ச்சுக்கல் நாட்டில்

[ ] 1914 அக்டோபர் 11-ம் தேதி போர்ச்சுக்கல் நாட்டில்

[ ] 1924 அக்டோபர் 11-ம் தேதி போர்ச்சுக்கல் நாட்டில்

[ ] 1934 அக்டோபர் 11-ம் தேதி போர்ச்சுக்கல் நாட்டில்;

**கேள்வி 03**

போர்ச்சுக்கல் நாட்டின் பாத்திமாவில் அன்னை மரியா எத்தனை முறை காட்சி அளித்தார்? (கன்னிமரியா – ஆக்னஸ் ஜோஸ் - பக். 165)

[ ] 3 முறை

[ ] 6 முறை

[ ] 10 முறை

[ ] 15 முறை

**கேள்வி 04**

மரியா கடவுளின் தாயாகவும் தூய்மைக்கு இலக்கணமாகவும் திகழ்வதை மக்களுக்கு நினைவூட்டியவர்கள் யார்? (கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 52)

[ ] நற்செய்தியாளர்கள்

[ ] இறைவாக்கினர்கள்

[ ] திருத்தூதர்கள்

[ ] அக்கால கிறிஸ்தவ அறிஞர்கள்

**கேள்வி 05**

மகனுக்குரிய அன்போடும் அக்கறையோடும் மரியாவை பாதுகாத்து வந்தவர் யார்?
(கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 40)

[ ] திருத்தூதர் பேதுரு
[ ] திருத்தூதர் பிலிப்பு
[ ] திருத்தூதர் யோவான்
[ ] திருத்தூதர் யாக்கோபு

**கேள்வி 06**

யோவான் எங்கு அன்னை மரியாவோடு தங்கியிருந்து கடவுள் புனிதராக செய்தியை மக்களுக்கு பறைசாற்றினார் ? (கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 40)

[ ] ரோம்
[ ] சிரியா
[ ] சிசேரா
[ ] எபேசு நகரில்

**கேள்வி 07**

மரியா இறந்ததும் அவரது உடலைச் சுற்றி எது வீசியது ?
(கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 41)

[ ] இருள்
[ ] தெய்வீக ஒளி
[ ] இடி மின்னல்
[ ] காற்று

**கேள்வி 08**

அன்னையின் கல்லறையை திறந்து பார்த்த தோமா கல்லறையில் எதை பார்த்தார் ?
(கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 41)

[ ] விண்ணக ஒளி
[ ] மணம் வீசும் மலர்கள்
[ ] விண்ணக ஒளியும் மணம் வீசும் மலரும்
[ ] இவற்றில் எதுவும் இல்லை

**கேள்வி 09**

மரியா தோமாவுக்கு எப்படி காட்சி அளித்தார் ? (கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 42)

[ ] பாறையின் நடுவே கருணை முகத்துடன்
[ ] தலையில் மணிமுடி சூடியவராய்
[ ] புன்னகை புரிந்து தலையசைத்தவராய்
[ ] எதுவும் பேசாமல் மௌனமாய்

**கேள்வி 10**

தோமாவுக்கு மரியா ஆசி வழங்கி பரிசாகக் கொடுத்தது என்ன ? (கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 42)

[ ] வெண்ணிற ஆடை

[ ] ஜெபமாலை

[ ] இடைக்கச்சையை

[ ] ரோஜா செடி

**கேள்வி 11**

அன்னை மரியாவின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வார்த்தை எது ? (கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 43)

[ ] கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவர்

[ ] கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராக அனுப்பினார்

[ ] உலக மக்களுக்கு மீட்பு வழங்க மனித உருவெடுத்த இறைமகன்

[ ] நான் ஆண்டவரின் அடிமை

**கேள்வி 12**

மரியாவின் இனியப் பெயர் எனது உள்ளத்தின் ஆழத்தில் மீட்பின் தைலமாக இறங்குவதாக என வேண்டிக் கொண்டவர் யார் ? (கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 53)

[ ] கார்த்தேஜ் ஆயர் புனித சிப்ரியன்

[ ] மிலான் ஆயர் புனித அம்புரோஸ்

[ ] வெரோனா ஆயர் புனித செனோ

[ ] செசரியா ஆயர் புனித பெரிய பேசில்

**கேள்வி 13**

மரியா பாவம் இல்லாதவர் அனைத்து புண்ணியங்களுக்கும் முன் மாதிரி என்று கூறியவர் யார்? (கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 53)

[ ] திருத்தூதர் பேதுரு

[ ] திருத்தூதர் சீமோன்

[ ] இறையியலாளரான புனித ஜெரோம்

[ ] நற்செய்தியாளர் மாற்கு

**கேள்வி 14**

மரியாவின் 370 ஆம் ஆண்டு நினைவு நாள் சிறப்பிக்கப்பட்டதற்கு ஆதாரம் எங்கு உள்ளது? (கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 53)

[ ] எகிப்தின் அந்தியோக்கு நகரில்

[ ] எகிப்தின் தெற்கே உள்ள சூடான்

[ ] எகிப்தின் மேற்கே உள்ள லிபியா

[ ] எகிப்தின் தலைநகரான கெய்ரோலில்

**கேள்வி 15**

பாவிகள் தங்களது நெருக்கடி வேளைகளில் மனம் கலங்கத் தேவையில்லை இறையன்னையின் உதவியை நாடலாம் என்று கூறியவர் யார் ? (கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 53)

[ ] நிஸ்ஸா ஆயர் புனித கிரகோரி

[ ] கிறிஸ்தவ அறிஞரான ஓரிஜன்

[ ] செசரியா ஆயரான புனித பெரிய பேசில்

[ ] வெரோனா ஆயர் புனித செனோ

**கேள்வி 16**

மரியாவின் தூய்மை சடங்கு விழா எருசலேமில் எப்பொழுது கொண்டாடப்பட்டது ? (கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 54)

[ ] கிறிஸ்து பிறப்பு விழாவுக்கு 20 நாட்களுக்கு பிறகு

[ ] கிறிஸ்து பிறப்பு விழாவுக்கு 30 நாட்களுக்கு பிறகு

[ ] கிறிஸ்து பிறப்பு விழாவுக்கு 40 நாட்களுக்கு பிறகு

[ ] கிறிஸ்து பிறப்பு விழாவுக்கு 50 நாட்களுக்கு பிறகு

**கேள்வி 17**

மண்ணில் தோன்றிய விண்மலர் யார் ? (கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 55)

[ ] எலிசபெத்

[ ] மரியா

[ ] எஸ்தர்

[ ] ரூத்து

**கேள்வி 18**

மரியா எதைக் கொண்டு வந்ததாக புனித அகுஸ்தினார் புகழ்ந்துரைக்கிறார் ? (கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 55)

[ ] மீட்பின் தைலம்

[ ] தூய்மையின் சடங்கு

[ ] மனித குலத்தின் மீட்பு

[ ] வினோதப் பாடல்கள்

**கேள்வி 19**

கடவுளின் அருளால் மரியா எதிலிருந்து பாதுகாக்கப்பட்டார் ? (கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 56)

[ ] தீய சக்திகளிடமிருந்து

[ ] அலகையிடமிருந்து

[ ] பாவக்கறைகளிலிருந்து

[ ] கொடிய வாதைகளிடமிருந்து

**கேள்வி 20**

அன்னை மரியாவின் விண்ணேற்புக் குறித்த நம்பிக்கையை எடுத்துரைக்கும் நூல் எது ? (கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 58)

[ ] திருவழிபாட்டு நூல்கள்

[ ] அனைத்து அருள் கொடைகள்

[ ] மரியாவின் பயணம்

[ ] பாவிகளின் அடைக்கலம்

**கேள்வி 21**

இறையன்னை மரியாவின் பெயரால் மூன்று ஆலயங்களை கட்டியவர் யார் ? (கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 57)

[ ] 452-ம் ஆண்டு பேரரசர் மார்சியன்

[ ] 490-ம் ஆண்டு புனித ரொமானோஸ்

[ ] 580-ம் ஆண்டு பைசாந்திய பேரரசு

[ ] 594-ம் ஆண்டு புனித கிரகோரி

**கேள்வி 22**

திருத்தந்தை மூன்றாம் செர்ஜியுஸ் காலத்தில் ரோமின் முக்கிய விழாக்களில் ஒன்றாக இருந்தது எது ? (கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 61)

[ ] மங்கள வார்த்தை விழா

[ ] மரியாவின் பிறப்பு விழா

[ ] மரியாவின் விண்ணேற்பு விழா

[ ] மரியாவின் துயில் கொண்ட விழா

**கேள்வி 23**

"அருள் நிறைந்த மரியே வாழ்க! ஆண்டவர் உம்முடனே பெண்களுக்குள் ஆசி பெற்றவர் நீரே, உம் வயிற்றின் கனியும் ஆசி பெற்றதே!" என்ற மங்கள வார்த்தை ஜெபத்தின் முதல் பகுதி எந்த நூலில் காணப்படுகிறது ? (கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 66)

[ ] ஆசி பெற்ற கன்னி மரியாவின் உற்பவம் என்ற நூல்

[ ] புனித கன்னியின் சிறு புகழ்மாலை என்ற நூல்

[ ] கன்னியின் பயணம் என்ற நூல்

[ ] இறையன்னையின் மரணம் என்ற நூல்

**கேள்வி 24**

மரியன்னையின் பக்தியில் முக்கியப் பகுதியாக இருந்த ஜெபம் எது ? (கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 67)

[ ] கிருபை தயாபத்து மந்திரம்

[ ] மங்கள வார்த்தை ஜெபம்

[ ] கிறிஸ்து கற்பித்த ஜெபம்

[ ] மனத்துயர் ஜெபம்

**கேள்வி 25**

அன்னையின் முதல் பட்டம் எது ? (கன்னிமரியா - ஆக்னஸ் ஜோஸ் - பக். 96)

[ ] மீட்பரின் தாய்

[ ] இறைவனின் தாய்

[ ] திருச்சபையின் தாய்

[ ] கடவுளின் தாய்

இந்த கேள்வித்தாள் உங்கள் பயிற்சிக்கு வெளியிடப்பட்டுள்ளது.

உங்கள் பதிலை ஆன்லைனில் சமர்ப்பிக்க, இந்த இணையதள முகவரியில் பதிவு செய்யவும்
https://www.kurusady.com/catechism/

ஆன்லைனில் சமர்ப்பிக்க முடியாதவர்கள், இந்த வினாத்தாளை அச்சிட்டு உங்கள் பதிலை டிக் [✔] செய்து பங்கு அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம்.

இப்படிக்கு,
அருட்பணி. பெர்பெச்சுவல் ஆன்றனி,
பங்கு தந்தை,
புனித அந்தோணியார் ஆலயம், குருசடி.